நகல்

17.10.1894 விஜயரங்கம்.

நகல் - 1

Pammal House,
Egmore, 17-10-1894.

பிரம்ம. ஸ்ரீ. சாமிநாத ஐயர் அவர்கள் சமுகத்
துக்கு

பம்மல் விஜயரங்கம் அனேக தண்டம்.
பி.ஏ. பரீக்ஷையில் தேறியிப்போது எம்.ஏ.
பரீக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருக்கும்
எனது கடைசி குமாரனாகிய சம்பந்தன்
என்பவன் சென்னையில் சேர்ந்திருக்கும்
சுகுண விலாச சபையாருக்காக - லீலா
வதி - சுலோசனை என்று பேரிட்டு ஓர் நா
டகத்தை யெழுதி அதை யந்த சபையாரைக்
கொண்டு இரண்டொருவிசை ஆட்டுவி
த்தான். இப்போது அந்நாடகத்தை அச்
சிட்டுத் தங்களுக்குத் தபால் மார்க்கமாக
ஒரு பிரதி அனுப்பியிருக்கிறேன். தயைசெய்
து தாங்கள் அந்நாடகத்தைப் பார்வையிட்
டு ஆக்ஷேபணையொன்று மில்லாதபக்ஷத்
தில் சாற்றுக்கவியொன்று எழுதியனுப்பும்
படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவன் தங்
களை விசேஷமாய்த் தெரியாததனால் தங்களுக்கு
இக்கடிதமெழுதும்படி யென்னைக் கேட்டுக்
கொண்டான். ம.ள.ள. ஸ்ரீ. கனகசபை முத
லியார் வீட்டில் தனக்குத் தங்கள் தரிசன
ங் கிடைத்ததாகவும் அந்த முதலியாரவர்கள்
அவனை யின்னானென்று தங்களுக்குத் தெ
ரிவித்ததாகவும் சொல்லுகிறான்.

சம்பந்தம் F.A. B.A. இரண்டு பரீக்ஷை
களிலும் தமிழில் ப்ரசிடென்சி முழுமைக்கும்
தமிழில் முதன்மையாக இருந்தான் - தமிழி
லூக்கமுடையவனாயிருக்கிறான் - இங்கிலீ
ஷிலும் யூனிவர்ஸிடி பரீக்ஷைகளிலெல்லாம்
முதல் வகுப்பிலேயே தேறியிருக்கிறான். இச்
சிறுவனுக்குத் தங்களைப் போன்றவர்களுடை
ய ஆசீர்வாதங் கிடைக்க வேண்டுமென்
கிற ஆவலினால் இக்கடிதத்தைத் தங்
களுக்கெழுதத் துணிந்தேன். மன்னிக்கக்
கேட்டுக் கொள்ளுகிறேன்.

அனேக தண்டம்,
பம்மல் - விஜயரங்கம்.

நகல்

17.10.1894 விஜயராகவம்.

நகல் -1

தாங்கள் வாசிக்கும் போது புத்தகத்தி லுள்ள பிழைகளைக் குறித்து அனுப்பக் கூடு மானால் அதிக உபயோகமாக இருக்கும். அந்த பத்திரிகை போலும் தங்களைப் போன்ற வித்வான்களுடைய சாற்றுக் கவிக ளோடும் புத்தகம் பயாணிடு செய்யப்பட வேண்டும்.

நகல்

17.10.1894 விஜயராங்கம்.

உ

~~(42)~~

17-10-1894

பம்மல். விஜயரங்கம்
17-10-1894.

லீலாவதி அவோகலைக்கு
சொற்றக்கவிவேண்டும்

1144